# நினைவு மலர்



அமரர்.

## திருமதி. வத்சலா பிரபாகரன்

அவர்களின் சிவபதம் பேறு குறித்த

**நினைவு மலர்** 04-12-2021

# சமர்ப்பணம்



திருகோணமலையை பிறப்பிடமாகவும்,

**Scarborough, Canada** வை வசிப்பிடமாகவும்

கொண்டு **05 NOV 2021** அன்று வெள்ளிக்கிழமை

இறைபாதம் அடைந்த

அமரர் திருமதி **வத்சலா பிரபாகரன்**

அவர்கள் நினைவாக வெளியிடப்படும்

இவ் நினைவு மலர் அன்னார் தம் ஆத்மா

இறைமடியில் நித்திய சாந்தி பெறவேண்டும்

என இறைவனைப் பிறார்த்தித்து அன்னார் தம்

பாதங்களுக்கே இம் மலரை

சமர்ப்பிக்கின்றோம்

# My ever-loving wife.

Having shared 32 Years of Marriage life, my wife Vathsala was called back to God's abode. She was the Angel that changed me with life's lessons. Blessed with 2 children, raising them well with endless passion. Remembering you is easy - I do it every single moment. Days are long, hard and empty without you. It's the endless pain of losing you, that will never go away. God called you back and sure you are free from pain. Rest peacefully my Love until we meet again.

## Miss you Vathsala

I thought I was a strong person,
But, I was proved to be wrong,
from the moment you left me, I've been in despair
In my heart, my wife I miss you so much,
you are my only life,
I love you from the bottom of my heart,
And being away from you is dismaying!
I miss you so much!

**-PRABA**



# நினைவு அஞ்சலி

04 12 2021



பிறப்பு
13 NOV 1959

இறப்பு
05 NOV 2021

# நினைவு அஞ்சலி

## திருமதி. வத்சலா பிரபாகரன்

...பிரிவால் வாடும்...

**குடும்பத்தினர் & உறவினர்கள்**

சிவகோத்திர மரபு வழிவந்த

# திருமதி. **வத்சலா பிரபாகரன்**

அவர்கள்

சிவபதம் அடைந்தமை குறித்த நினைவு மலர்

**2021-11-05**

## திதி வெண்பா

மன்னு பிலவ வருடம் ஐப்பசி மாதம்
தன்னில், வளர்பக்க பிரதமை திதி - அன்று
இன்னிலம் விட்டே ஏகினார் வத்சலகுமாரி
இறைபதம் இணைந்திடத் தானே

## சரிதை அகவல்

இந்துவின் முத்தாம் இலங்கையின் கீழ்க்கரையில்,
கோயிலுஞ் சுனையும் கொண்டே விளங்கும்
தெட்சணகைலாயமாம் கோணேசர் கோவிலும்,
இயற்கைத் துறைமுகத்துடன் எழில்பெற
இலங்கும் திருகோணமலையாம் தெய்வத் திருநகரில்,
பெரும் வர்த்தகமும், பேணும் விவசாயமும் செய்தே
அரும்பொருளீட்டி அனைவர்க்கும் அளித்த
பெருங்குண வள்ளல் பெரியோன் இராமநாதபிள்ளை,
அருங்குணவதி அன்பான சிவசோதிப்பிள்ளையை
மணந்தே அறிவோர் கூறிய இல்லறமாம்
நல்லறமியற்றி அருந்தவத்தால் அருமை
பெருமையாகப் பெற்றனர் பதினொரு பிள்ளைகள்,
அவர்களுள் பத்தாவது பிள்ளையாக வந்துதித்தாள்
மாதரிற் சிறந்த வத்சலகுமாரி. அழகிய பெண்,
அமைதியான குணம், அறிவிலும் மிக்காள், சோதரர்
பிள்ளைகளுக்குச் சொல்லி வைத்தாள் பாடங்கள்,

காலங் கனிந்தது பாசமிகு சோதரிக்கு
யாழ் சண்டிலிப்பாயைச் சேர்ந்த வைத்தியர்
கோபாலசிங்கம், சிவபாக்கியவதி
பெற்றெடுத்த புத்திரனாம்
**பிரபாகரனை** வரனாகப் பெற்றோர்
வரித்தபோது இல்லறம் ஒன்றாய்
நல்லறம் தன்னை இணையாகக் கொண்டாள்
இளையமகள். தம்பதிகளின்
தவப்பயனாய் மூத்தவன் சியாமுடன் இளையவன்
சிவாந்துமென இரு புத்திரர்களுடன்
பரிணமித்த வாழ்க்கையை
வாழ்வாங்கு வாழ்ந்தாள் **2021.11.05** வரை.
கூறாமல் வந்தான் கூற்றுவனும்
சுடர்விளக்கைக் கொண்டு சென்றான்
இயற்கையின் நியதி என்றே கதறி அழுதனர்
கணவரும் பிள்ளைகளும்.
துடித்துப் போயினர் தூரவிருந்த
உறவுகள். என்று காண்போம் இனியுனை
என்று ஏங்கினர். இறைவன் பாதமே
நிலையான இன்பமென்றெண்ணியோ
ஏகினாய் பைங்கிளியே என்றே
அரற்றினர் அழுதனர் விபரமறியத்
துடிதுடித்தனர். பிறப்பதும் இறப்பதும்
இயற்கையின் நியதிதான்
என்றாலும் பொறுக்குதில்லை மனம்
பொங்குதே. உன் ஆத்மா சாந்திபெற
உளமுருகி நாம் தன்னிகரிலா
இறைவன் தாள் பணிகின்றோம்.

சிறிய தாயார்
**மணிமேகலாதேவி கார்த்திகேசு**

# WORD PORTRAIT OF VATHSALA

Ramanathapillai and Sivasothipillai were able to enjoy another momentous occasion of their parenthood by delivering Vathsalakumari into this world on the Thirteenth day of November 1959. Her home at 9, Vidyalayam Lane in Trincomalee, became firstly her nursery and then shelter through to her adulthood. She was well nourished by the loving care and guidance from the parents, and also well enriched by the guardianship of her nine siblings born ahead and the one following. The experience of growing up with siblings is very special indeed. Siblings could be likened to a tree with branches wide spreading, so be their personalities, habits, and capabilities. Vathasala was openminded enough to accept these imperfections. The family values of acceptance, warmth, trust and closeness were firmly rooted.

Schooling and the teachers played an important part as an outside influence on Vathsala. She went to St Mary's College at Trincomalee. The discipline instilled by the nuns and the dedication of the teachers, were later to become a part of her character. Punctuality and orderliness were her trademark, such that one could set a clock against her. Vathsala's mother's house at 9, Vidyalayam lane (also known as Ammamah's or Paaty's place) was the watering hole for all her nephews and nieces. Vathsala took responsibility towards them during their after-school care. She allowed them a free run of fun, frolic and play. But study time with her demanded serious commitments.

Her home also had the unique position of being within a triangle formed by three great temples of Trincomalee; the worshipful Kaali Ambaal, the sacred Muthukumara Swamy and the mighty and imposing Koneshwar. This afforded Vathsala to conveniently practice her spiritual beliefs. She was a Krishna devotee. Of her many daily home chores, the first was to make a floral garland out of home plucked flowers and dedicate it to the Krishna statue inside.

If life is to be considered a journey, then there arise moments to pause, do a bit of introspection, fill up, and move on. The idea of marriage was floated around. By proposal and mutual consent Vathsala married Praba in 1989. Praba possessed characteristics of sharp witticism. Laughter became infectious when he was around. Vathsala chipped in with her short sharp remarks as well. When the couple was around, tonic wouldn't be necessary to raise one's spirits. Praba and Vathsala entered into happy parenthood in Abu Dhabi following the birth of Shyam and Shivanth. Perhaps their concern for providing a promising future for their growing children, would have prompted them to move over to Canada.

Vathsala always took upon the task of home-making seriously. Not in any way to be underrated, home-making demands the full commitment of time, effort, skill, experience, and creativity. It is an art indeed. Praba, Shyam and Shivanth were blessed in having this home-made gift from Vathsala.

Sadly, undercurrents of health issues ran through her at the prime of her duty filled life. She could sense the changes inside overwhelming her. She faced the inevitable with her strength of character. After sixty-two years of purposeful life, Vathsala is no more with us. Praba has lost a fine lifetime companion. Shyam and Shivanth have lost their fine tender and dutiful mother. Her siblings have lost an affectionate sister. Her nephews and nieces have lost a model of tidiness and firmness. Her friends and well-wishers have lost a warm-hearted human being. This was Vathsala in total. This was how far and deep Vathsala's reach extended.

**This sole cannot be cleaved by weapon nor can it be burnt by fire, water cannot wet it, nor can wind wither it.**

~BHAGAVAD GITA~

RAMANATHAPILLAI
FAMILY

# நினைவலைகள்

சிறு பூக்கள் பதினொன்று
கடல் காற்று மண்ணிலே
எம் வீட்டுத் தோட்டத்தில்
கொத்து மல்லிகையாய் மலர்ந்து
மனம் மகிழும் வாசனையாய்
பூத்துக் குலுங்கின.
பக்குவமாய்,
பத்தாவதாய்
எம்முடனே சிரித்தே
பூத்த மலர் நீ!

பூங்கொத்தினில் ஒன்றாய்
உனக்கென தனியிடத்தை
உன் பெரு மனத்தால்
பிடித்து நின்றாய்

மல்லிகைக் கொடியிலே
வீசிய தென்றலில்
பூவுடன் பூவாய்
கொத்துடன் கொத்தாய்
மனதால் தொட்டும், பட்டும்
மனதின் நிறைவால்
நிறைந்தே நின்றாய்

புதிதாய் பூத்த பூங்கொத்துகளுக்கு
முன்மாதிரியாய், ஆசிரியையாய்,
முழுவடிவாய், அன்பாய்
எம்மனத்தில் நிலைத்தே நின்றாய்

அவசரம்... அவசரம்.....
அவ்வளவு அவசரமாய் சென்றுவிட்டாய்

தங்கையே......
உன் பிரிவு தாங்க முடியாத ஒன்று!

உன் கணவருக்கும், குழந்தைகளுக்கும்....
ஏன்.... கூட வாழ்ந்த பூக்களுக்கும்
உன்னுடன் முடிக்காத பல கதைகள் உண்டு

தங்கையே......
முடியாத பல கதைகள் முடிக்க......

மீண்டும் ஓர் ஜென்மமாய்
உனை நாம் காண வேண்டும்.
உன் புன்சிரிப்புடன் மீண்டும் ஒருமுறை
கொத்துடன் கொத்தாய் பூத்து
நாம் பேசி மகிழ வேண்டும்.

****** அன்புச் சகோதரன்
**கலாநிதி ராஜ்மோகன்,**



# THINKING OF YOU

It was all far too sudden and much too soon.
Thinking about you brings back so many memories.
Memories of your caring and loving nature. How you would teach me every subject so carefully, meticulously planning tests and quizzing me thoroughly. But you weren't just a teacher, you were so much more. My role model, Aunty and friend. Someone I trusted and admired.
In fact, you were like a second mother.

That is why it was so difficult when we separated for the first time. You moved to Canada, and I moved to Australia, we were literally oceans apart. Just when the timing to reconnect seemed perfect, you were taken away once again.

But this time it is so much worse because I know I will never get the chance to tell you how much you mean to me and how you could instantly brighten up the room just by smiling.

You will always hold a special place in our hearts.
I am sure that you are in a beautiful place now.
I sincerely understand the pain that everyone is feeling and send our heartfelt condolences.

உங்கள் ஆத்மா இறையடியில் மோட்சநிலை
எய்த இறையருளை வேண்டுகிறேன்

**- Lakshmi, Niece of Vathsala**

# MY MEMORIES OF VATHSALA AUNTY

My clear memories of her start when I lived at Ammamma's house for 2 years, sharing the same bedroom. The image that I have in mind is that of her with hair never out of place, with beautiful long plait, toe nails always painted, clothes never creased. What was striking was her dedication to routine. She was always up at 5.30 am, without an alarm, as she walked to the bathroom the radio is switched on, then on to making coffee.

I would at times pluck followers for her to make garlands. If I had something special at school like a fair, where I have taken to food, I would ask and she would happily make it for me. After lunch she would take a nap, again this was so timely and I never saw her over sleep, then onto the evening chores and making dinner. Of course, as Ammamma's house was all our meeting point for play, she had to put up with all our naughtiness. When things got out of hand, she will chase us pretending to give a shot but never did. She was strict but, in her heart, too kind to be harsh with us.

Then came the time of the wedding.
When Praba Chiththappa came for the wedding and the wedding party stayed at Vijaya Auntie's house, I was one of the kids who was pondering around both houses with excitement. Praba Chiththappa called me and gave a box of chocolates to pass to Vathsala aunty. And when I took it took her, I got a good roasting saying that I should have not taken it and made me give it back to him. I still laugh about it to this day.
She was all about the rules.

Then a few years later when I met her here
and there on her trips back to Sri Lanka,
I saw the light heartedness in her.
She was cracking jokes with us,
which was certainly humour
that had rubbed off Praba Chiththappa.

The next time I met her was when she came to
London and I got to catch up with her for day.
We took a visit the wax museum where she took
photos next to Diana saying she was a fan.

Years past and I got meet her again in Canada this time,
where she made puttu and mutton curry, the way we
used to have at ammamma's house. When I said to her
that it brought back memories she packed some for me
take away, so that I can have it the next day.

Now it is hard to comprehend that the last time
I saw her was the brief visit to Australia. It still feels like
she is around and will be around. I'm thankful that I had
her around along with Ammamma, looking after me
while my parents were in Nilavali. To this day it amuses
me how Vathsala Aunty was so dedicated to her routine
and way of life which never changed over the years.
There was always a softness through her strictness.
Her kind soul will always live in our memories.

**- Vathsala's niece Maithi**

# WE STILL BELIEVE THAT YOU ARE THERE IN CANADA!

Vathsala Mami came into our family when I was 9 years old. Their marriage was a memorable one in our family. It was a Jaffna, Trinco collaboration.

Mami always carry a beautiful smile. She is very soft spoken. Cleanliness is one of her trademarks like her cooking. Her simplicity always attracts everyone. She is a beautiful soul. When she got married, she came & lived in sandilipay for a while she got to spend some time with us. She introduced the chess game to me. When she taught me the game, she will play with me & let me win few times. I was overwhelmed at those moments thinking I'm winning mami and that motivated me to continue to play the game. It took me years to realize what she really did.

Since Mami came into Praba mama's life, she was everything to Him. She was a fabulous wife, mother, and a role model for every home maker. Every time she visited Colombo from Abu Dhabi, the love and affection she showed to me & my family is something that cannot be explained in words.

In recent years it was a blessing for us to have Mami with us in Melbourne, she particularly keen to see kangaroos in the wild and not in enclosures. Very rarely she expresses her likings. We will cherish those days forever. We never thought Mami will leave us this soon especially mama & the boys. She very well knew how much they needed her. I'm sure Mami will be watching & guiding Shyam & Shivanth. You are definitely in a better place Mami. But we still believe that you are there in Canada. Rest In Peace🙏

**- Dakshayini Gunaratnam, (Niece)**

# EULOGY – AMRITA PARENTS' CLASS

Dear friends and family,

On behalf of the Amrita Learning Parents' Class, we would like to share some fond memories of a wonderful person, our beloved Vathsala Acca. We also want to pay tribute to the admirable life Vathsala Acca led with Praba Anna as a loving couple and model parents.

All of us came to know and see Vathsala Acca as a very happy and cheerful person – especially when she smiled at you. Looking at Acca's picture on the obituary notice, we remember how she had the capability to illuminate the space around her with that magnificent smile that makes you feel better instantly. That special smile never faded, even when she became ill – she kept on smiling and bringing brightness to others. In addition to her joyful personality, Praba Anna's wonderful sense of humour also had something to do with her always smiling face. Vathsala Acca very much enjoyed the jokes that Praba Anna came up with. We have seen her telling Praba Anna, "Injai Appa, evaikkum athai orukka chollungo." This is the cue for Praba Anna to share the best jokes from his collection that were already enjoyed by Acca. Every time, Praba Anna confidently rose to the occasion and delivered the jokes with poise, while Vathsala Acca proudly watched him with admiration, enjoying the joke one more time. Having seen this scene play out many times, we feel Praba Anna attained his high sense of humour thanks to Acca's encouragement and her jovial attitude towards him in his life. Similarly, this special couple brought out the best in each other in many ways. This not only benefited them, but also everyone who surrounded them.

Vathsala Acca and Praba Anna have been very engaged parents, and they participated regularly at our Parents' classes and all other events.

We always see Praba Anna and Vathsala Acca arrive at the Parents' class together. In the class, we see them sitting together. Most often, they'd be seated with Anna on the right side and Acca sitting on the left, just like Lord Shiva and Devi. When we meet, groups of parents take turns to bring in food. During her turns, Acca made it a point to always bring in home-cooked food, even though take-out might be a more practical and easier option. We enjoyed the meals prepared by Acca and they were special because of the love and compassion that went into making it. We know that every single day, Acca curated three different types of food experiences for Praba Anna and their sons, Shyam and Shivanth, catering to their distinctive tastes. We always looked up to Praba Anna and Vathsala Acca as examples who we can aspire to. We are thankful to them for being a wonderful role model to us that way. Based on the strong relationships they both built in the parents' class, Praba Anna, Shyam and Shivanth can draw support from an even larger family at Amrita Learning.

Now about Shyam and Shivanth, who will miss their amazing mother…When we see the two thambis, we are reminded of the Tamil saying – "Thaiyaippole Pillai, Noolaippole Selai." In them, we see a spitting image of their Amma with the same distinguished qualities of love, compassion, and willingness to serve others. We are delighted to see how both Shyam and Shivanth have turned out because of Vathsala Acca and Praba Anna instilling these important qualities in them from a young age. We pray that the Devi enables these two young gentlemen with great strength and help them move forward, so they can live an amazing life to benefit many like their mother did. May the grace of the Divine Mother protect and guide this family always.

When someone endearing like Vathsala Acca passes away suddenly, it leaves us utterly shocked, sending us into depths of sorrow. While this feeling is entirely normal, we can also pause to think about how Acca felt about it.

We know that Vathsala Acca was very content with the life she led, grateful for the loving family she built with Praba Anna, as well as the relationships she fostered with all of us. When she heard the medical diagnosis from the doctors, she knew her days were possibly numbered. Instead of acting scared and resentful, Vathsala Acca felt she has done what she needed to in this life, and she was fully prepared to move on. She remained calm, comforting others around her, who were still trying to comprehend this sudden turn of events with disbelief. In those final days, Vathsala Acca very well knew that the Divine Mother was about to grant her wish and not let her suffer by bringing her closer to Devi, sooner.

Reflecting on Vathsala Acca's life and passing, verses from the Vairamuthu song "Jenmam Nirainthathu" comes to mind:

**Poomikku nam oru yathirai vanthom**
**Yathirai theerumun nithirai kondom**
**Nithirai poovathu niyathienralum**
**Yathirai enbathathu thodarkathaiyahum**

We all enjoyed the privilege of having someone special like Vathsala Acca who made our lives meaningful in many ways - as a wonderful wife to Praba Anna, loving mother to Shyam and Shivanth, and in many other ways, as a great daughter to her parents, sister to her siblings, also as a cousin, aunt, niece, in-law, friend, and so on.

To Acca, this life represents one of many passages she embarked on in an eternal journey to join Devi in Eikayanu Santhanam. Farewell Vathsala Acca, on your eternal journey!

We all pray that her soul is given sanctum at Devi's feet now.

**Parents' Class - Amrita Learning**

# உயர்வாழ்வுக்கு உளமார்ந்த சமர்ப்பணம்

பற்றறுத்து நின்றயெனைப் பதற வைத்த பிரிவுச் செய்திகண்டு உதறிய உடலுடன் கதறியகதறல்கேட்டு ஓடிவந்து கூடிநின்று ஓலமிட்ட எமதன்னை இலங்கையன்னை கலங்கி நின்ற சோகமதை எடுத்துரைக்க வார்த்தையேது? எம் மூத்தோருரை மெய்யேயெனக் கட்டியம் கூறி, பிறந்த மண்ணின் கண்ணீர் வெள்ளம் பிரிந்தவர்தம் தூயவாழ்க்கையேயென சத்தமாய் சத்தியத்தை சான்று பகன்ற பிரிவுத்துயரநாள். நாட்கள் வாரங்களான பின்னும் நம்ப மனம் மறுத்து நிற்க மனக்காயம் ஆற வழியேதென திக்கற்று நிற்கின்றோம். என்றும் எதிர்பார்த்தித்ததில்லை யான் இருக்க பிரிய மனம் வரும் என்று, ஒரே தங்கை நானென பெருமையாய் பேசி நின்ற எனைத் தவிக்க விட்டுச் சென்றதேன் அக்கா?

இராமநாதபிள்ளை சிவசோதிப்பிள்ளை தம்பதிகளுக்கு பத்தாவது சற்புத்திரியாம் எம் சகோதரி வத்சலகுமாரி உயரிய நற்பண்புகளுடன் பாசம்மிக்க மகளாய், சகோதரியாய், மனைவியாய், தாயாய் இறுதிவரை வாழ்ந்த வாழ்வுதனை வாழ்த்த வார்த்தைகளும் உண்டோ! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அவரிடத்தில் குழந்தைப் பருவத்திலேயே குடிகொண்டு முழுவாழ்வும் கலந்து செருக்காய் செறிந்து பரந்தது. அய்யிரண்டு வயதில் பவ்யமாய் பொங்கல் செய்து பாங்குடன் நின்தந்தைக்கு பரிமாறிய அழகுகாணக் கண்கோடிவேண்டும். உடன்பிறந்தோர் மணமாகிச் செல்ல, இருவர் வேலை நிமித்தம் செல்ல தனியாளாய் ஆண்டுகள் பல நின்தாய்தனை ஆரோக்கியமாய் பராமரித்து பாதுகாத்த பாங்கு என்னவென்று சொல்வேன். மணமாகிவிட்ட பின்னும் நின்தாயை பிரிய வருந்தி எம் தாயுடனிருக்க எனை அழைத்த கதை யாரறிவர்?

இன்னமும் மறக்கவில்லை மூன்றரை வயதில்
உவகையுடன் துள்ளிய குழந்தை கண்டு முதன்முதலாய்
எமை ஈன்ற தாய்மடிவிட்டு இறங்கி நினைத்தேடி நான்
வந்த நாள். பொறுமையாய் நாட்கள் பல கடந்தும்
எனக்காக துள்ளல் பழக்கியது பசுமையாய் மனத்தில்
பதிந்த நாட்கள் ஆகும். எம்பெற்றோர் எனக்களித்த
பொம்மைப் பரிசுகளில் ஏனோ மனம் செல்லவில்லை
உற்சகமாய் உலாவரும் குழந்தை நீவிர் என்முன்னிருக்க.
வளர் பருவமதில் பார்த்த அனைத்தையும்
கண்ணிமைக்கும் நேரத்தில் கிரகித்து வகைவககயாய்
வீட்டில் வடிவமைத்து விளையாடும் படைப்பாற்றல்மிகு
சிறுமியுடனிக்க என் முன்னிருந்த பொம்மைகள் வெற்றுப்
பொருட்களாய் காட்சியளித்தன. மதிநுட்பம் மிக்க
சிறுமியாய் ஊட்டச் சத்துள்ள உணவுத் தெரிவு அவசியம்
என்றுரைத்து எனை உண்ண வைத்தது என்றும் அகலா
நினைவுகள். பள்ளிப் பருவத்தில் பக்குவமாய் பாடசாலை
இடைவெளி நேரங்களிலும் இணைபிரியாது
என்னுடனிருந்து பகிர்ந்தளித்து உண்ட நாட்கள்
பொக்கிஷமாய் என்றென்றும் நிலைத்து நிற்கின்றன. என்
இருபதுகளில் சேலைமடிப்பு அடையாளத்துடன் நான்
அணிவது கண்டு நானும் தன்போல் மிக நேர்த்தியாக
உடை அணிய விரும்பி எனது சேலையை இஸ்திரி செய்து
அக்கறையாய் அணியச் செய்ததை இன்னமும்
என்னிதயம் இனிதாய் தன்னகம் நிலைநிறுத்தி உள்ளது.
பார்வைக்கோளாறு உயர்கல்விக்குத் தடையாக, தளராமல்
வீட்டுப் பொறுப்புகளை மூத்த சகோதரிகளுடன்
அமைதியே உறைவிடமாய் உரிய நேரத்தில் முடிக்கும்
திறன் இறுமாப்புடன் இறுதிவரை நின்வசம் குடியிருந்தது.
நின் சகோதரர்கள் வியாபாரத்தில் சீராக சிறப்புடன்
கணக்காய்வு முதல் காரியதரிசி பணிகள்வரை
தனியாளாய் திருமணம் ஆகும்வரை உதவிய மாண்பு
அளப்பரியது. திருமணம் நினை நாடு கடந்து
தொலைதூரம் செல்ல வைத்தும் நின்மனம் தாய் மற்றும்
உடன் பிறப்புகள் நல்வாழ்விலும் தங்கி நின்றது

நின் இருமைந்தர்களும் பல்லாண்டு தவம் செய்தனரோ
நினைத்தாயாய் பெற! ஐக்கிய அரபு நாட்டில் புதல்வரின்
கல்விக்காய் அரபு எண்களை அயலவரிடம் அறிந்து பின்
நின்மகன்களுக்குப் பாடம் புகட்டி செம்மையாய் வளர்த்த
வல்லமை அளப்பரியது. தம்பதியர் வாழ்க்கை தனிப்பட்ட
விடயம் என்பதால் பகிர்ந்ததில்லை எனினும் கணவர், இரு
புதல்வர்களுக்குப் பணி செய்வதே நினது முழுநேரக்
கடமையாகி கனடாவில் குடியேறிய பின்பும் தொடர்ந்தது.
செம்மையாய் வளர்ந்து நன்மக்களாய், மாண்புள்ள
இளைஞர்களாய் பரிணமித்த ஈர்புதல்வர்களைக் கண்டு
பூரிப்புடன் பாரினிற்குப் பரிசாக விட்டுச்
சென்றனரோ எம் சகோதரி!

தொற்று முடக்க காலமும் அந்நிய மண்ணும்
தம்வசமிழந்து நின் சீரான வாழ்விற்குத் தலைதாழ்த்த,
நின் துணைவரும், இருபுதல்வர்களும் நின்
பிரிவுத்துயரத்தின் மத்தியிலும் எம் சகோதரியின் ஈமச்
சடங்குகளை சீராக வடிவமைத்து இணையத்தளக்காட்சி
மூலம் உலகெங்கும் உள்ள உறவினர்கள் பங்குபெற
வழிசெய்ய, அக்னி வளர்த்து, ஓர்மையுடன் ஒருமித்த
குரலில் வேத ஒலி முழங்க, சீரான உச்சரிப்பில்
ஓர்மையுடன் ஒருமித்த குரலில் சிவபுராண பாராயணம்
திக்கெட்டும் பரவி, தற்காலிகமாய் சிறியஆத்மசாந்தியை
காண்பவர்களும் பெற, உறவினர்கள், நண்பர்கள் புடைசூழ
தீர்க்கசுமங்கலியாக பெருமையுடன் பிரியாவிடை
பெற்றது அன்னாரின் தூயநெறி முறையான வாழ்வை
பவ்யமாய் சான்று பகருகின்றது
எம் அனைவரின் நல்வாழ்விற்காய் அர்பணித்த நீவிர்
என்றென்றும் சாந்தி, இறை நல்லாசிகளுடன் இருக்க
பிரார்த்தனை செய்கிறோம். நின் நீங்கா நினைவுகளுடன்

**- இளைய சகோதரி சிவகுமாரி**

# விநாயகர் வணக்கம்



திருச்சிற்றம்பலம்

# விநாயகர்துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

# தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.

# திருவாசகம்

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடஉந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணஉ வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலமேயிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான்
மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும்போதுன் அடியின்
கீழிருக்கவென்றார்.

# திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிஉகள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்**

திருச்சிற்றம்பலம்

# பித்தா பிறை சூடீ

பித்தாபிறை சூடீபெரு மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள் அத்தாஉனக் காளாயினி
அல்லேன்எனல் ஆமே. 1

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள் ஆயாஉனக் காளாயினி
அல்லேன்எனல் ஆமே. 2

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள் அன்னேஉனக் காளாயினி
அல்லேன்எனல் ஆமே. 3

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள் அடிகேளுனக் காளாயினி
அல்லேன்எனல் ஆமே. 4

பாதம்பணி வார்கள்பெறும் பண்டம்மது பணியாய்
ஆதன்பொருள் ஆனேன்அறி வில்லேன் அருளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள் ஆதீஉனக் காளாயினி
அல்லேன்எனல் ஆமே 5

தண்ணார்மதி சூடீதழல் போலும்திரு மேனீ
எண்ணார்புரம் மூன்றும்எரி உண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள் அண்ணாஉனக் காளாயினி
அல்லேன்எனல் ஆமே 6

ஊனாய்உயிர் ஆனாய்உடல் ஆனாய்உல கானாய்
வானாய்நிலன் ஆனாய்கடல் ஆனாய்மலை ஆனாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள் ஆனாய்உனக் காளாயினி
அல்லேன்எனல் ஆமே. 7

ஏற்றார்புரம் மூன்றும்எரி உண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள் ஆற்றாயுனக் காளாயினி
அல்லேன்எனல் ஆமே. 8

மழுவாள்வலன் ஏந்தீமறை ஓதீமங்கை பங்கா
தொழுவார்அவர் துயர்ஆயின தீர்த்தல்உன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள் அழகாஉனக் காளாயினி
அல்லேன்எனல் ஆமே. 9

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள் ஆரூரன்எம் பெருமாற்காள்
அல்லேன்எனல் ஆமே. 10

**திருச்சிற்றம்பலம்**

“Condemn none:
if you can stretch out a helping hand,
do so. If you cannot, fold your hands,
bless your brothers, and let them go
their own way”.

“You have to grow from the inside
out. None can teach you, none can
make you spiritual. There is no other
teacher but your own soul”.

“Where can we go to find God if we
cannot see Him in our own hearts
and in every living being”.

“All differences in this world are of
degree, and not of kind, because
oneness is the secret of everything:.

--Swami Vivkananda

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ,

அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையதை எதை இழந்தாய்,

எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ,

அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோ,

அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவடையதாகிறது

மற்றொரு நாள், அது வேறோருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமாகும்"

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Contact Araviram for all of your post Hindu funeral needs

ARAVIRAM

Phone:
Raguram - (647) 648-1154
Aravinth - (647) 784-0378

Email:
araviramservices@gmail.com
Website:
www.araviram.com